Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 111/2023

## Deposition of P.W.6

| | | |
|---|---|---|
| Name | : | கலைசெல்வன் |
| Father's Name | : | வேலாயுதம் |
| Village | : | மேட்டுப்பட்டி |
| Age | : | **60/2024** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 03.12.2024**
(1, 2, 3, 4, 5 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. 1, 2, 3, 4, 5 எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல்விசாரணை**

நான் தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று மேட்டுப்பட்டியில் வசித்து வருகிறேன். கடந்த **14.09.2022**ஆம் தேதி ஆலங்குடி காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணிபுரிந்துவந்தபோது சம்மட்டிவிடுதி காவல்நிலைய உதவி ஆய்வாளர் பொறுப்பை கூடுதலாக கவனித்து வந்தேன். அன்றைய தினம் சம்மட்டிவிடுதி காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வளார் ஆறுமுகம் என்பவர் நிலையபொறுப்பில் இருந்தபோது வடவாளத்தை சேர்ந்த ராமையா மகன் ஆறுமுகம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று நிலையக்குற்ற எண். **148/2022** இதச பிரிவு **379** ன் கீழ் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். சிறப்பு உதவி ஆய்வளார் ஆறுமுகம் என்பவரால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.**5**ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அசல் புகாரினையும், முதல் தகவல் அறிக்கையையும் மேல்நடவடிக்கைக்காக என்னிடம் ஒப்படைத்தார். நான் அவற்றை பார்வையிட்டு வழக்கு கோப்பினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அதே தினம் மதியம் **2.30** மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கிருஷ்ணமூர்த்தி, திருப்பதி ஆகியோர் முன்பு சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வைமகசர் ஆகியன தயார்செய்தேன். சாட்சியால் தயார் செய்யப்பட்ட மாதிரி வரைபடம் அசாஆ.**6**ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**2.** பின்னர் சாட்சிகள் ஆறுமுகம், ரமேஷ், மணிகண்டன், கிருஷ்ணமூர்த்தி, திருப்பதி ஆகியோரை விசாரணை செய்து அவர்களது வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்தேன். வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில் **24.11.2022**ஆம் தேதி காலை **9.00** மணியளவில் நான் போலிஸ் பார்ட்டியுடன் இச்சடி பஸ் ஸ்டாப் அருகே வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது சந்தேகத்திற்கு இடமான வகையில் வந்த **TN 07 BC 2696** என்ற

பதிவெண் கொண்ட சில்வர் நிற சுவிப்ட் டிசையர் காரில் வந்த **5** நபர்களை விசாரித்தபோது அவர்களது பெயர்கள் அய்யப்பன், முருகேசன், குமார், ராமராசு, ஜோதிநாகூர் என்று தெரியவந்தது. அவர்களை விசாரித்தபோது முன்னுக்குப்பின் முரணாக பெயர் முகவரியை மாற்றி கூறினார்கள். எனவே, அவர்களை மீண்டும் விசாரித்தபோது சம்மட்டிவிடுதி காவல் நிலைய குற்ற எண்.**148/2022**, சட்டப்பிரிவு **379** இதச கீழான வழக்கில் தொடர்புடையவர்கள் என்று தெரியவந்ததால் மேற்படி **5** பேரையும் காரணம் கூறி கைது செய்து அவர்களில் அய்யப்பன் என்பவரை சாட்சிகள் ராமசுப்பிரமணியன், சரத்குமார் ஆகியோர் முன்னிலையில் விசாரித்தபோது **1**வது எதிரி அய்யப்பன் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.**7**ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**3.** பின்னர் எதிரி அய்யப்பன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அதே தினம் மதியம் **2.45** மணியளவில் முள்ளிக்காப்பட்டி கிராமத்தில் உள்ள **1**வது எதிரி அய்யப்பன் என்பவரது வீட்டின் அருகே உள்ள பட்டியிலிருந்து **1**வது எதிரி மேற்படி சாட்சிகள் ராமசுப்பிரமணியன், சரத்குமார் ஆகியோர் முன்னிலையில் அடையாளப்படுத்தி ஆஜர் செய்த வழக்கு சொத்துகளான **1. TN 07 BC 2696** என்ற பதிவெண் கொண்ட சில்வர் நிற சுவிப்ட் டிசையர் கார் ஒன்று, **2. TN 10 Y 3137** என்ற பதிவெண் கொண்ட சில்வர் நிற யுனோவா கார் ஒன்று, **3.** வெள்ளாடுகள் **- 48** ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.**8**ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் ராமசுப்பிரமணியன், சரத்குமார் ஆகிய இருவரையும் விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் கைது செய்யப்பட்ட எதிரிகள் **5** பேர் மற்றும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகளுடன் நிலையம் வந்து எதிரிகளுக்கு திரேக பரிசோதனை முடித்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன்.

**4.** பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் ஆறுமுகம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகளான **1. TN 07 BC 2696** என்ற பதிவெண் கொண்ட சில்வர் நிற சுவிப்ட் டிசையர் கார் ஒன்று, **2. TN 10 Y 3137** என்ற பதிவெண் கொண்ட சில்வர் நிற யுனோவா கார் ஒன்று, **3.** வெள்ளாடுகள் **- 48** ஆகியவற்றை படிவம் **91**இன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் **91** அ.சா.ஆ.**9**ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சொத்துகளான **TN 07 BC 2696 (**ஆர்.பி.எண். **90/2023)** என்ற பதிவெண் கொண்ட சில்வர் நிற சுவிப்ட் டிசையர் காரினை காட்டும் புகைப்படம் அ.சா.ஆ.**10**ஆகவும், **TN 10 Y 3137 (**ஆர்.பி.எண். **90/2023)** என்ற பதிவெண் கொண்ட சில்வர் நிற யுனோவா காரினை காட்டும் புகைப்படம் அ.சா.ஆ.**11** ஆகவும்

குறியீடு செய்யப்படுகிறது. பிறகு சம்மட்டிவிடுதி காவல் நிலைய உதவி ஆய்வாளராக சமுத்திரராஜன் பொறுப்பேற்றுக்கொண்டதால் வழக்கு கோப்பினை அவரிடம் ஒப்படைத்தேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

ம.வி.இல்லை